சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண். OS 109 of 2015

2021 ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின் /பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் D.W. 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G.சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகேந்திரன் | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | சாதி | |
| தாலுகா | | வயது | |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

01-04-2021

சாட்சி ஒப்புக் கொள்ளுவதால் சா.சா.ஆ.2 ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சா.சா.ஆ.2 முழுமையாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. சேகர் என்பவர் அனுப்பிய மனு நகலும் சா.சா.ஆ 2 ல்உள்ளது என்றால் ஆமாம். சேகர் மனுவில் குறிப்பிட்ட ஐந்து ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். சேகர் மனுவில் கண்ட இணைப்பு ஆவணங்கள் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்படவில்லை. தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டுயிருந்தால் கொடுத்தியிருப்போம். தகவல் அறியும் உரிமை சட்டத்தில் எத்தனை பக்கங்கள் வரை

இலவசமாக கொடுக்கலாம் என்றால் அது பொது தகவல் அதிகாரியின் முடிவுக்கு உட்பட்டது. பழனிச்சாமி கொடுத்த மனுவிற்கு விசாரணை அதிகாரியாக யார் நியமிக்கப்பட்டார் என்று எனக்கு தெரியாது. சேகர் கொடுத்த மனு 06-09 என்று மடடும் காணப்படுகிறது அது எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் 2014 ஆம் ஆண்டு முதல் பொது தகவல் அறியும் உரிமை சட்ட பணியை பார்க்கிறேன். பழனிச்சாமி கொடுத்த மனு தேதி 01-08-2011 என்று சொன்னால் மனுவில் அவ்வாறு உள்ளது. சேகர் மனு மீது நடவடிக்கை எடுக்காமல் பழனிச்சாமி மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முழுமையான ஆவணமாக இல்லை என்பதால் இந்த ஆவணத்தை ஏற்றுக் கொள்ள இயலாது என்று சொன்னால் சரியல்ல. அசல் ஆவணங்கள் இல்லாமல் வழங்கப்பட்டுள்ள சா.சா.ஆ.2 ஏற்புடைய ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (6 ம் பிரதிவாதி தரப்பில்)</u>

ஆவணங்களை கொண்டுவந்து கொடுக்க மட்டுமே நான் அறிவுறுத்தப்பட்டேன் என்றும் ஆவணங்களின் சாரம்சம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். சேகர் மற்றும் பழனிச்சாமி மனுக்கள் மீது இறுதி முடிவின் மீதி மேல்முறையீடு செய்யப்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியாது. சா.சா.ஆ.2 ன் அசல் எங்கள் அலுவலகத்தில் தற்போது இல்லை. விதிகளின் படி நாங்கள் அதை அழித்து விட்டோம். பழனிச்சாமிக்கு 11-02-2012 அன்று கோப்பு நகல் கொடுக்கப்பட்டது. எனவே இடைப்பட்ட 9 ஆண்டுகளில் சர்வே நம்பரிலோ இதர வகையிலோ திருத்தம் செய்ய வாய்ப்புள்ளது என்றும் அது பற்றி எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரிதான். சா.சா.ஆ.2 முழுமையும் எங்கள் அலுவலகத்தில் மட்டுமே கொடுக்கபட்டதற்கு வாய்ப்பு இல்லை சொன்னால் சரிதான்.